தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பரதநாட்டியம் Dance | Three Hours / Gr -12 (2023) | 53 | T | I,II |

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. கிழக்கிந்தியாவை மையமாகக் கொண்ட சாஸ்திரிய நடனம்
1) மணிப்புரி 2) கதக் 3) கதகளி 4) பரதநாட்டியம் 5) குச்சிப்புடி

02. கவிச் சொற்கட்டினால் இறைபுகளைப்பாடும் உருப்படி
1) சப்தம் 2) கீர்த்தனை 3) பதம் 4) கௌத்துவம் 5) வர்ணம்

03. பிராணிமித்ரா என அழைக்கப்படும் நடனக் கலைஞர்
1) பால சரஸ்வதி 2) ருக்குமணி தேவி அருண்டேல்
3) கௌரி அம்மாள் 4) சாந்தா பொன்னுத்துரை
5) வழுவூர் இராமையாப்பிள்ளை

04. அநாகத கிரகம் என்பது
1) தாளத்தின் பின் சங்கீதம் தொடங்குவது
2) தாளத்தின் முன் சங்கீதம் தொடங்குவது
3) தாளமும் சங்கீதமும் ஒரே நேரத்தில் தொடங்குவது
4) தாளத்தின் முன் அல்லது பின் சங்கீதம் தொடங்குவது
5) தாளத்தின் பின் எதுவும் தொடங்காது

05. குச்சிப்புடி நடனத்தில் இன்று காணப்படுகின்ற நாட்டிய நாடகத்தை முதன் முதலில் வடிவமைத்தவர்
1) ததே பள்ளி பேரையா ஸாஸ்திரி 2) வேம்படி சின்னசத்தியம்
3) சிந்தா வெங்கட ரத்தினம் 4) சித்தேந்திர யோகி
5) வேதாந்தம் லக்ஷ்மி நாராயணன்

06. கவி வள்ளத்தோலினால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்
1) கலைமன்றம் 2) சரஸ்வதி மன்றம் 3) கலாமண்டலம்
4) நுண்கலை மன்றம் 5) கலா ஷேத்திரா

07. உடுக்குவடிவில் அமைந்த யதி அமைப்பின் பெயர்
1) வேதமத்யம் 2) சமயதி 3) கோபுச்சயதி
4) மிருதங்கயதி 5) விவுமயதி

08. தாள அங்கக் குறியீட்டில் ∪ என்பதால் குறிக்கப்படுவது

1) லகு 2) அனுத்ருதம் 3) த்ருதம் 4) காகபாதம் 5) புளுதம்

09. பரதநாட்டியத்திற்கு அபிநயதர்ப்பணம் போல ஹஸ்தலக்ஷண தீபிகாவுக்குரியது

1) குச்சிப்புடி 2) கதகளி 3) மோகினிஆட்டம்
4) கதக் 5) மணிப்புரி

10. கிளியை வாகனமாக கொண்ட தேவர்

1) அக்கினி 2) யமன் 3) நிருத்தி 4) குபேரன் 5) மன்மதன்

11. தாளக்கருவிகள் பற்றி நாட்டியசாஸ்திரத்தில் விளக்கப்படும் அத்தியாயம்

1) 33 2) 34 3) 35 4) 27 5) 18

12. ஆண்களால் சலனம், குன்தாளம் என ஆடப்படும் தாண்டவ நடனம் இடம்பெறும் ஸாஸ்திரிய நடனம்

1) கதக் 2) கதகளி 3) ஒடிசி 4) குச்சிப்புடி 5) மணிப்புரி

13. கிருஷ்ண பகவானின் இளம்பராய வாழ்க்கை பற்றி கூறுவது

1) பாமா கலாபம் 2) பாணசுரன் 3) ருக்குமணிகல்யாணம்
4) கிருஷ்ணலீலாதரங்கினி 5) கொல்லா கலாபம்

14. மோகினி என்றால்

1) அழகான பெண் என்று பொருள்
2) ஆட்டம் என்று பொருள்
3) நடன கலைஞர் என்று பொருள்
4) பெண்கள் என்று பொருள்
5) உயர்ந்த நடனம் என்று பொருள்

15. அபிநய தர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்.

1) டாக்டர் உ.வே சுவாமிநாதையர் 2) வீரராகவன்
3) திரு ஆனந்தக்குமாரசுவாமி 4) கபிலவாத்சல்யன்
5) நந்திகேஸ்வரர்

16. கடவுளின் அழகான அலங்காரங்களை வர்ணிப்பது

1) மூர்க்கபக்தி 2) மாதுரியபக்தி 3) சாக்கியபக்தி
4) வாத்சல்யபக்தி 5) ஞானபக்தி

17. சாட்சுஷிய சாத்விகம் என்பது

1) கண்,தலை இவற்றினால் அபிநயிப்பது
2) உடலினை கொண்டு அபிநயிப்பது
3) கைகளைக் கொண்டு அபிநயிப்பது
4) கண்களைக் கொண்டு அபிநயிப்பது
5) கால்களைக் கொண்டு அபிநயிப்பது

18. அதிபாஷை என்பது

1) விண்ணகத்தோரின்மொழி
2) உயர்குடியினரின் மொழி
3) பாமரனின் மொழி
4) விலங்குகள் மற்றும் பறவைகளின் மொழி
5) குறியீட்டு மொழி

19. ;;;;;, த, திங், கி ணதொம் த, திங், கிண / தொம் த, திங், கிணதொம் இது அமைந்த ஜாதி

1) திஸ்ரம்
2 ) கண்டம்
3) மிஸ்ரம்
4) சதுஸ்ரம்
5) சங்கீர்ணம்

20. |5 0|5 |5 இத்தாளத்தின் எண்ணிக்கை யாது?

1) 17
2) 19
3) 16
4) 20
5) 22

(20x1=20புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) கோர்வை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2) கோர்வை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் யாது? (6 புள்ளிகள்)

3) டமருக யதியை முடிவாக கொண்டு நான்கு ஆவரத்தனத்திற்கு அதிதாளக் கோர்வையினை அமைக்குக. (12 புள்ளிகள்)

02. "தரண" என்ற நிருத்த உருப்படியைக் கொண்ட சாஸ்திரிய நடனத்தை பின்வரும் அடிப்படைகளுள் விளக்குக.

i) தோற்றம் (4 புள்ளிகள்)

ii) வளர்ச்சி (4 புள்ளிகள்)

iii) இசை, இசைக்கருவிகள் (3 புள்ளிகள்)

iv) ஆடல் முறை (5 புள்ளிகள்)

v) ஆடை, அணிகலன் (4 புள்ளிகள்)

03. i) தாள தசப்பிராணன்களின் பிரிவுகளை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii) அப்பிரிவுக்கேற்ப பிராணனகளை குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

iii) அவற்றை விளக்குக. (12 புள்ளிகள்)

04. i) நால்வகை அபிநயங்களும் எவை? (2 புள்ளிகள்)

ii) வாச்சிகா அபிநயம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

iii) வாச்சிகா அபிநயத்தின் பிரிவுகளை குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

iv) சாத்விகா அபிநயம் பற்றி குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

05. சிறுகுறிப்பு எழுதுக.

1) ஆங்கிகா அபிநயம் 2) நாட்டிய சாஸ்திரம் 3) உப்பிளவன பேதம் 4) ஜாதி

(5x4=20 புள்ளிகள்)

06. நடன செய்முறையில் நிகழ்நிலை கற்றலின் சாதக பாதக நிலையினை விபரிக்குக.

(20 புள்ளிகள்)